# த.வெ.க. அரசு பயிர்க்கடன் தள்ளுபடி அறிவிப்பு!

# விவசாயிகள் கடும் அதிருப்தி - ஏமாற்றம்!

### பயிர்க்கடன் தள்ளுபடி:

## விவசாயிகளை சந்திக்க மறுத்த முதல்வர்!

### தலைமைச் செயலகத்தில் அனுமதிக்கவில்லை!

சென்னை, மே 27 - முழுமையான பயிர்க் கடன் தள்ளுபடி கோரிக்கையை வலியுறுத்தி முதலமைச்சரை சந்திக்க முயன்ற விவசாயிகளை காவல்துறையினர் தடுத்து நிறுத்தி காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொண்டதால் பரபரப்பு நிலவியது.

தேர்தலில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றாமல், மிக குறைந்த அளவிலேயே விவசாய கடனை த.வெ.க., அரசு தள்ளுபடி செய்துள்ளது. இதற்கு விவசாயிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். இந்நிலையில், முழுமையான பயிர்க்கடன் தள்ளுபடி கோரிக்கையை வலியுறுத்தி சென்னை தலைமைச் செயலகத்தில் முதலமைச்சரை சந்திப்பதற்காக தமிழ்நாடு விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தினர் வந்தனர். அப்போது அவர்களை தடுத்து நிறுத்திய காவல் துறையினர், காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொண்டனர். இதனால் விவசாயி கள் மிகுந்த வேதனையடைந்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர்கள், கடந்த ஆட்சியாளர்களை பின்பற்றியும், தேர்தல் வாக்குறுதியின்படியும் பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினர். இல்லையென்றால் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றும் எச்சரித்தனர்.

## விவசாயிகளை ஏமாற்றும் த.வெ.க. அரசு!

### காவிரி டெல்டா பாசன விவசாய சங்கங்கள் கண்டனம்!

தஞ்சை, மே 27 - "த.வெ.க. அரசின் பயிர் கடன் தள்ளுபடி அறிவிப்பு விவசாயிகளை ஏமாற்றும் அறிவிப்பாக உள்ளது" என்று காவிரி டெல்டா பாசன விவசாய சங்கங்கள் கண்டனம் தெரிவித்துள்ளது.

**காவிரி டெல்டா பாசன விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் கே.வீ.இளங்கீரன் கூறியிருப்பதாவது:**

தேர்தல் அறிக்கையில் 5 ஏக்க ருக்குள் நிலம் வைத்திருப்ப வருக்கு 100 சதவீதமும், 5 ஏக்கருக்கு மேல் வைத்திருக்கும் கடனில் 50 சதவீதமும் கடன் தள்ளுபடி என்று தேர்தல் வாக்குறுதி கூறிவிட்டு, தற்போது விவசாயிகளை ஏமாற்றும் விதமாக இந்த அறிவிப்பு செய் யப்பட்டுள்ளது. சிறு, குறு விவசாயிகள் இரண்டரை ஏக்கர் கடன் பெற்றிருந்தாலே ரூ.91,250 வருகிறது.

இதை முழுவதுமாக தள்ளுபடி செய்தால் மட்டுமே தான் விவசாயிகளுக்கு ஓரளவு கடனில் இருந்து மீள முடியும். எனவே, முதல்வர் விஜய், தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்.

**தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச்செயலாளர் சாமி.நடராஜன் கூறியிருப்பதாவது:**

தமிழக அரசின் அறிவிப்பு தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிக்கு முரணாக உள்ளது.

வேளாண் உற்பத்தி செலவு கள்கடுமையாக உயர்ந்துள்ளது. மத்திய அரசு கட்டுப்பபடியான ஆதார விலையை அறிவிக்காத நிலையில் பெரும் பகுதி விவசாயிகள் கடனாளிகளாக மாறியுள்ளனர். எனவே, 5 ஏக்கருக்குட்பட்ட விவசாயிகள் பெற்றுள்ள கூட்டுறவு பயிர்க்கடன் முழுவதையும் தள்ளுபடி செய்ய வேண்டும். 5 ஏக்கருக்கு மேல் உள்ள விவசாயிகள் பெற்ற கூட்டுறவு பயிர் கடனில் 50 சதவீதத்தை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**தமிழ்நாடு காவிரி விவசாயி கள் சங்கத்தின் பொதுச்செயலாளர் பி.ஆர்.பாண்டியன் கூறியிருப்பதாவது:**

இந்த அறிவிப்புகள் கடன் சுமையில் இருக்கும் விவசாயி களை காப்பாற்ற உதவாது. மாநில அரசுகள் தனது நிதியில் இருந்து செயல்படுத்தும் கடன் தள்ளுபடி உள்ளிட்ட நலத்திட்டங் களுக்கு ரிசர்வ் வங்கியின் வழி காட்டுதல்கள் பொருந்தாது என்பதை முதல்வர் உணர வேண்டும்.

கடந்த காலங்களை பின்பற்றி கடன் வசூல் நடவடிக்கையை நிறுத்த வேண்டும். நடப்பாண்டுக்கான புதிய கடன் வழங்குவதற் கான நடவடிக்கையை தமிழக அரசுதீவிரப்படுத்தி, நிதி ஆதாரங்களைபெருக்கிக் கொண்டு கடன் தள்ளுபடி நடவடிக்கையை தொடர வேண்டும். தற்போதைய அறிவிப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## விவசாய சங்கங்கள் ஏமாற்றம்!

**சென்னை, மே 27 – கூட்டுறவு வங்கிகளில் ரூ.50,000 வரையிலான பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்படும் என்ற தமிழக அரசின் அறிவிப்பு, பெரும்பாலான விவசாயிகளிடையே அதிருப்தியையும் குமுறலையும் ஏற்படுத்தியுள்ளது.**

முழுமையான கடன் தள்ளுபடி எதிர்பார்த்த விவசாயிகளுக்கு, நிபந்தனைகள் மற்றும் உச்சவரம்பு காரணமாக இந்த அறிவிப்பு ஏமாற்றமாக அமைந்துள்ளது. 5 ஏக்கருக்கும் குறைவாக நிலம் வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே முழுமையான தள்ளுபடி வழங்கப்படும் என்ற நிபந்தனை, அனைத்து விவசாயிகளுக்கும் பலனளிக்கவில்லை.

பெரும்பாலான விவசாயிகள் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலும், தனியார் வங்கிகளிலும் வாங்கியுள்ள பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்படவில்லை. அறிவிக்கப்பட்ட குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் கடன் பெறாதவர்கள் மற்றும் தவணை தவறாமல் (Prompt) செலுத்தியவர்கள் இத்திட்டத்தில் பலனடைய முடியாமல் போயுள்ளது.

தேர்தல் கால வாக்குறுதிகளில் குறிப்பிட்டபடி, நிபந்தனையின்றி அனைத்து விவசாயிகளின் கூட்டுறவு மற்றும் தேசிய வங்கிக் கடன்களையும் முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என்பது விவசாய சங்கங்களின் முக்கிய கோரிக்கையாக உள்ளது.

### விவசாய கடன் தள்ளுபடி

## ரூ.50,000 மட்டும்தான் என்பதை ஏற்க முடியாது!

### தமிழ்நாடு அரசுக்கு விவசாய அமைப்புகள் கண்டனம்!

சென்னை, மே 27 - தேர்தல் வாக்குறுதிப்படி விவசாய கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் - விவசாயிகள் வலியுறுத்தினர்.

தேர்தல் வாக்குறுதியில் அறிவித்தபடியே, விவசாயிகளின் கூட்டுறவு வங்கிக்கடனை முதலமைச்சர் விஜய் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும், 5 ஏக்கர் வரையிலான கடனை தள்ளுபடி செய்வேன் என்று அறிவித்துவிட்டு, தற்போது 50 ஆயிரம் மட்டும் என்று அறிவித்துள்ளதை ஏற்க முடியாது என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

### கழகக் கொடியேற்றி – நலத்திட்ட உதவிகள் வழங்கி ஜூன் 3–ல்

## முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாளை சிறப்பாகக் கொண்டாடுவோம்!

### கழக ஆதிதிராவிடர் நலக்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!



சென்னை, மே 27 - தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம் நேற்று முன்தினம் (25.05.2026) காலை 10.30 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழுத் தலைவர் மருதூர் ஏ.இராமலிங்கம் தலைமையில், இணைச் செயலாளர்கள் புஷ்பராஜ், முன்னாள் எம்.எல்.ஏ., வி.பி. இராஜன், திப்பம்பட்டி ஆறுச்சாமி, துணைச் செயலாளர்கள் பா.துரைசாமி, மு.பொன்தோஸ், மு.பரமானந்தம், சி.தசரதன், மாரியப்பன் கென்னடி, முன்னாள் எம்.எல்.ஏ., கொ. ரமேஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழுச் செய லாளர் ஆ.கிருஷ்ணசாமி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளினை மாநிலம் முழுவதும் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவது குறித்து உரையாற்றினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

**தீர்மானங்கள்**

1. ஜூன்3, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழாவினையொட்டி, ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி மற்றும் வார்டுகளில் கழக இருவண்ண கொடியேற்றி, இனிப்புகள் வழங்குவதோடு நலத்திட்ட உதவிகள் வழங்க வேண்டு மென இக்குழு தீர்மானிக்கிறது.

2. நடைபெற்று முடிந்த சட்டப்பேரவைப் பொதுத் தேர்தலில், தி.மு.கழகம் மீதும், கழகத் தலைவர் அவர்கள் மீதும் நம்பிக்கை வைத்து தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்ட ணிக்கு வாக்களித்த 1 கோடியே 54 லட்சத்து 82 ஆயிரத்து 782 வாக்காளர்களுக்கு இந்தக் கூட்டம் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

3. 2026 சட்டமன்றத் தேர்தலில், கொள்கை உறுதியோடு மதச்சார்பின்மை சக்திகளை ஒன்றிணைத்து 'மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை' உருவாக்கி, தேர்தல் களத்தில் நம்மையெல்லாம் வழிநடத்தி, முதன்மை தொண்டராய் ஓய்வில்லாமல் உழைத்து, 73 சட்டமன்றத் தொகுதிகளில் நம் கழகக் கூட்டணி வேட்பாளர்கள் வெற்றிபெற முதன்மை காரணமாக விளங்கிய நம் கழகத் தலைவர் அவர்களுக்கும் தமிழ்நாடு முழுவதும் சூறாவளி தேர்தல் பிரச்சாரம் சுற்றுப்பயணம் செய்து 73 தொகுதிகளில் வெற்றிக்கு வழிவகுத்த - கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் இந்தக் கூட்டம் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

4. தற்போது "ஆதிதிராவிர் நலக்குழு"வினை பெயர் மாற்றம் செய்து "சமகநீதிக் குழு" என்று பெயர் மாற்றம் செய்து அறிவித்திட வேண்டுமென கழகத் தலைவர் அவர்களிடம் இக்கூட்டம் கோரிக்கை வைக்கிறது.

5. எதிர்வரும் காலத்தில் ஆதிதிராவிடர் நலக்குழுவின் செயல்பாட்டினை மேலும் வலுவாக்கிட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் என அனைத்து நிர்வாகிகளையும் நியமனம் செய்யும் அதிகாரம் மாநில ஆதிதிராவிடர் நலக்குழுவுக்கு வழங்கிட வேண்டுமென கழகத் தலைவர் அவர்களை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

6. நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலிலும் தி.மு.க.வினரின் உழைப்பினால் ஐநது சட்டமன்ற உறுப்பினர்களை பெற்ற காங்கிரஸ் ஒரு நன்றி உணர்வு கிஞ்சித்தும் இல்லாமல் ஒரே இரவில் அணி மாறிச் சென்ற சொந்த உழைப்பில் ஒருநாளும் வெற்றி பெற முடியாமல், நம்பியவர்களுக்கெல்லாம் துரோகமிழைக்கும் அறமில்லாத காங்கிரஸ் கட்சிக்கு இந்தக் கூட்டம் தனது கண்டனத்தைப் பதிவு செய்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## 'சொல் புதிது' திட்டம்: 47 சொற்கள் இறுதி!

சென்னை, மே 27 - தமிழ் வளர்ச்சிக் கழகம் சார்பில் சென்னையில் நடை பெற்ற சொல் புதிது திட்டக் கூட்டத்தில் ஆங்கிலச் சொற்களுக்கு இணையாக 47 தூய தமிழ்ச் சொற்கள் இறுதி செய்யப்பட்டன.

தமிழ் வளர்ச்சிக் கழகம் சார்பில் சொல் புதிது' திட்டத்தின் 13ஆவது கூட்டம் சென்னையில் அண்மையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்துக்கு தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் ம.இராசேந்திரன் தலைமை வகித்தார். இதில் பேராசிரியர்கள் மு.இராமசுவாமி. சா.சரவணன், ஒப்பிலா மதிவாணன், விஜயலட்சுமி , ம.இளங்கோவன், தி.கமலி, இரா.கஸ்தூரிராஜா, பாரதி பாலன், ஊடகவியலாளர்கள் ராஜ்கண் ணன், நீரை மகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், கேடஸ்ட்ரோஃபி - பேரழிவு, டஃபிள் பேக் - உருளைப்பை, ஃபேஸைல் ஆக்ட் - மேம்போக்குத்தனம், கிச்சன் க்ளீனர் - அடுக்களைத் தூய்மி, ஸெடன்ட்டரி லைஃப் ஸ்டைல் - இயக்கமில்லா வாழ்க்கை முறை, ஸ்னைல் - ஏளனம், டீட்டர்ஸ் - தள்ளாட்டம் என்பன உள்பட 47 ஆங்கிலச் சொற்களுக்கு இணையாக தூய தமிழ்ச் சொற் கள் இறுதி செய்யப்பட்டன.

### வேலூர் செங்கல் சூளைகளில் மாமூல் கேட்டு மிரட்டல்

## த.வெ.க.வினரை கைது செய்யக்கோரி பொதுமக்கள் சாலை மறியல்!



வேலூர், மே 27 – வேலூர் கணியம்பாடி செங்கல் சூளைகளில் மாமூல் கேட்டு மிரட்டல் விடுத்த தவெகவினரை கைது செய்யக்கோரி பொதுமக்கள் மறியலில் ஈடுபட்டனர். வேலூர் அடுத்த கணியம்பாடி, கணியம்பாடி புதூர், நெல்வாய், வல்லம் உள்ளிட்ட இடங்களில் 25க்கும் மேற்பட்ட செங்கல் சூளைகள் இயங்கி வருகின்றன.

இந்நிலையில் கடந்த 22ம் தேதி கணியம்பாடி ஒன்றிய தவெக செயலாளர் விஜயகுமார், நிர்வாகிகள் லோகேஷ், ஈஸ்வரன் உட்பட பலர் கார், பைக்குகளில் கணியம்பாடி புதூரில் யஇயங்கி வரும் செங்கல்சூளைகளில் புகுந்து மாதம் ரூ.1 லட்சம் கொடுக்காவிட்டால் சூளைகளை இழுத்து மூடுவோம் என மாமூல் கேட்டு மிரட்டியதோடு ஆபாசமாக பேசி உள்ளனர்.

இதில் தகராறு ஏற்பட்டதால் வேலூர் தாலுகா போலீசார் இருதரப்பையும் சமாதானப்படுத்தினர். இதற்கிடையில் த.வெ.க.வினர் மாமூல் கேட்டு மிரட்டிய வீடியோ வைரலானது.

மேலும் செங்கல்சூளை உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் தாலுகா போலீசாரிடம் புகார் மனு அளித்தனர். ஆனால் புகார் கொடுத்து 2 நாட்கள் ஆகியும் போலீசார் நடவடிக்கை எடுக்காததால் செங்கல் சூளை உரிமையாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் நேற்று காலை கணியம்பாடி பஸ் நிறுத்தம் அருகே மறியலில் ஈடுபட்டனர்.

தகவலறிந்த தாசில்தார் பழனி மற்றும் தாலுகா போலீசார் மறியலில் ஈடுபட்டவர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தினர். அப்போது 'மிரட்டல் விடுத்த தவெக நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுக்கும்வரை போராட்டத்தை கைவிடமாட்டோம்' என தெரிவித்தனர். அதற்கு போலீசார், நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தனர்.

இதையடுத்து பொதுமக்கள் மறியலை கைவிட்டு, சாலையோரமாக நின்று போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் அனைவரையும் ஆர்ஐ அலுவலகத்திற்கு வரவழைத்து, ஆர்டிஓ செந்தில்குமார் தலைமையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. ஆர்டிஓ செந்தில்குமார் கூறுகையில், பணம் கேட்டு மிரட்டியதற்கான ஆடியோ ஆதாரம் இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

அதை சமர்ப்பிக்க அறிவுறுத்தி உள்ளோம். ஆதாரம் உண்மையாக இருந்தால் வழக்குப்பதியப்படும் என்றார். இதையடுத்து அனைவரும் கலைந்து சென்றனர்.

செங்கல் சூளை உரிமையாளர்கள் மற்றும் அப்பகுதி பெண்கள் கூறுகையில், 'கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக செங்கல் சூளை தொழிலையே வாழ்வாதாரமாக நம்பி 300க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வாழ்ந்து வருகிறோம்.

திடீரென எங்கள் வாழ்வாதாரம் பாதிக்கும் வகையில் மாமூல் கேட்டு மிரட்டுவது கண்டிக்கத்தக்கது. மாமூல் கேட்டு மிரட்டிய த.வெ.க. நிர்வாகி விஜய குமார் உள்ளிட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். சம்பந்தப்பட்டவரை அக்கட்சி பதிவிலிருந்து நீக்க வேண்டும்' என்றனர்.

### ஆண்டிப்பட்டியில் கைத்தறி சங்க நிலம் தனியாருக்கு தாரைவார்ப்பு!

## கைத்தறி நெசவாளர்கள் கடும் எதிர்ப்பு!

### த.வெ.க. அரசு மீது சரமாரிப் புகார்!



தேனி, மே 27 – தேனி மாவட்டம் ஆண்டிபட்டி நகரில், தேனி மதுரை நெடுஞ்சாலையில் சக்கம்பட்டி கைத்தறிநெசவாளர் சங்கத்திற்குச் சொந்தமான சுமார் 80 சென்ட் நிலம் உள்ளது. , இந்த நிலம் திடீரென இயந்திரங்கள் மூலம் சுத்தம் செய்யப்பட்டது. இதைப் பார்த்த நெசவாளர் சங்க உறுப்பினர்கள் பெரும் அதிர்ச்சியடைந்தனர். இதுகுறித்து அவர்கள் விசாரித்தபோது, இந்த நிலத்தைத் தனி நபர் ஒருவருக்கு குறைந்த வாடகைக்கு விடுவதால் அரசுக்கு பல லட்சம் இழப்பு ஏற்படும் வகையில் கைத்தறித்துறை அதிகாரிகள் ரகசியமாக நடவடிக்கை எடுத்துள்ளது தெரியவந்தது.

**நெசவாளர்கள் சரமாரி புகார்:**

இதுகுறித்து நெசவாளர் சங்க உறுப்பினர்கள் தரப்பில் கூறப்படுவதாவது:

நெசவாளர் சங்கத்திற்குச் சொந்தமான இவ்வளவு மதிப்புமிக்க இடத்தை, சங்கத்தில் உள்ள உறுப்பினர்களின் பயன்பாட்டிற்கு வாடகைக்கு விடாமல், ஒரே ஒரு தனி நபருக்குக் குறைந்த வாடகைக்குத் தாராளம் காட்ட அதிகாரிகள் முயன்றுள்ளனர். இதனால் அரசுக்கு மிகப்பெரிய வருவாய் இழப்பு ஏற்படுவதோடு, நெசவாளர் சங்க உறுப்பினர்களின் வாழ்வாதாரமும் கடுமையாகப் பாதிக்கப்படும்.

கடந்த கால திமுக ஆட்சியில் இந்த நிலத்தை வாடகைக்கு விடாமல் பாதுகாத்து வந்தனர். ஆனால், தற்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன் இந்த நிலத்தை முறைகேடாகத் தனிநபருக்குத் தாரைவார்க்க அதிகாரிகள் துடிக்கிறார்கள். இதுகுறித்து அரசு உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் புகார் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து மதுரை கைத்தறி துறை உதவி இயக்குநர் சேரன் அவர்களிடம் கேட்டபோது அவர் கூறியதாவது:

நெசவாளர் சங்கத்திற்குச் சொந்தமான பல்வேறு நிலங்கள் ஆக்கிரமிப்பாளர்களின் பிடியில் சிக்கி யுள்ளன. அவற்றை மீட்பதற்கு துறை ரீதியாகப் பல்வேறு தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போது தேனி மதுரை நெடுஞ்சாலையில் அமைந்துள்ள இந்த 80 சென்ட் நிலம் நீண்ட நாட்களாக பராமரிப்பின்றிப் புதர் மண்டி இருந்தது. இந்த இடம் மீண்டும் ஆக்கிரமிப்பாளர்களின் பிடியில் சிக்கிவிடக் கூடாது என்பதற்காகவே, அதனைச் சுத்தம் செய்து, வாடகைக்கு விட்டு பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள முதற்கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எதிர்காலத்தில் அரசு சார்ந்த கட்டடங்கள் கட்டுவதற்கு இந்த இடம் தேவைப்பட்டால், உடனடியாக வாடகைதாரர்களை அகற்றிவிட்டு அரசிடம் ஒப்படைக்கவும் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், நெசவாளர்களின் எதிர்ப்பை அடுத்து, தற்போது இந்த இடத்தை வாடகைக்கு விடுவதற்கான எந்தவொரு முயற்சியும் இனி மேல் எடுக்கப்பட மாட்டாது, என்று அவர் தெரிவித்தார்.

நெசவாளர் சங்க நில விவகாரத்தில் அதிகாரிகளின் இந்த திடீர் பின்வாங்கல் ஆண்டிபட்டி பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.